# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை
***************************

## புலம்பெயர் இந்திய இளைஞர்களுக்கான இந்தியாவை அறிவோம் நிகழ்ச்சித்திட்டம்

**இந்தியாவை அறிவோம் நிகழ்ச்சித்திட்டத்தின் (**KIP) 66 மற்றும் 67 ஆம் பதிப்புகளுக்கான உத்தேச கால அட்டவணையினை இந்திய அரசாங்கத்தின் வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

| | **உத்தேச திகதி** | **பங்குதார மாநிலம்** | **இணையத்தில் விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி** |
|---|---|---|---|
| 66வது KIP | 30 ஜூலை 2023 முதல் 18 ஆகஸ்ட் 2023 | கேரளா | 15 ஜுன் 2023 |
| 67வது KIP | 13 ஆகஸ்ட் 2023 முதல் 01 செப்டெம்பர் 2023 | மஹாராஷ்டிரா | 01 ஜூலை 2023 |

2. புலம்பெயர் இந்தியர்களில் (இந்தியாவில் வதியாத இந்தியர்கள் தவிர்ந்த) 18 வயது முதல் 30 வயதுவரையானோரில் பெற்றோர்கள் ஊடாக இந்தியாவுடன் நெருக்கமான தொடர்பினைக்கொண்டிருக்கும் அதேநேரம் இந்தியாவில் மிகுந்த ஆர்வத்தினைக் காண்பிப்பதுடன் பல்வேறு துறைகளிலும் திறமைமிக்கவர்கள் இந்தியாவை அறிவோம் நிகழ்ச்சித்திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

3. உலகம் முழுவதுமுள்ள இந்திய புலம்பெயர் இளைஞர்களை தமது தாய்நாட்டுடன் இணைப்பதனை இலக்காகக்கொண்டு நடத்தப்படும் இந்தியாவை அறிவோம் நிகழ்ச்சித்திட்டம், சமகால இந்தியாவின் பன்முகங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் மூன்றுவார நிகழ்வாகும்.

4. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு குறித்த 21 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின்போது, இந்தியாவின் அரசியலமைப்பு,

பொருளாதாரம், சமூகம் மற்றும் பல்வேறு முக்கிய துறைகளில் உள்ள அபிவிருத்திகள் பற்றிய உள்ளீடுகள் வழங்கப்படும். மேலும், வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அவர்கள் செல்வதன் மூலம் இந்தியாவின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தை அவர்கள் அறிவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் நிபுணர்களுடன் தனித்தனியான சந்திப்புகள், உயரதிகாரிகள் மற்றும் தலைமைத்துவத்துடனான சந்திப்புகள் ஆகியவையும் இடம்பெறும். அத்துடன், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்திய மாநிலங்களுக்கு 7 முதல் 10 நாட்களுக்கான பயணமும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

5. இந்நிகழ்ச்சித்திட்டத்தின்போதான சகல செலவீனங்களுக்கும் மேலதிகமாக இருவழி விமானக் கட்டணத்தில் 90% இந்திய வெளியுறவுத்துறை அமைச்சினால் செலுத்தப்படும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் **www.kip.gov.in** மூலமாக இறுதி திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**********

கொழும்பு